**யாழ்ப்பாணம் மாநகர சபை**

---------------------------------

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

---------------------------------

**1 நிதிக்கூற்றுக்கள்**

---------------------

**1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

-----------------------------------------

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 09 ஏப்ரல் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 28 செப்தெம்பர் 2018 இல் முதல்வருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

--------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

----------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

----------------------------------

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு உரித்தான 71 ஆதனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஆதனங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) உள்ளூராட்சி சேவை அலுவலர்களுடைய ஓய்வூதியங்களுக்கும் இளைப்பாற்று நயங்களுக்குமாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் கோரப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 115,168,996 மீளாய்வாண்டு நிதிக்கூற்றுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் வீதங்களின் நிலுவைகளானது விநியோகிக்கப்பட்ட பட்டியல்களினடிப்படையில் கணிப்பிடப்பட்டிருக்காது தவறாக ஆதன மதிப்பீட்டில் 6 சதவீதமாக கணிப்பிடப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் திரண்டு வந்திருந்த வீதங்களின் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 78.74 மில்லியனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள வருமான அறவீடுகள் மற்றும் வருமான நிலுவைகளுக்கும் வருமான பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள அத்தகைய மீதிகளுக்குமிடையே ரூபா 19,757 தொடக்கம் ரூபா 236,177 வரையிலான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வீதவரி நிலுவைகளுக்கும் கணிக்கப்பட்டிருக்கும் வீதவரி நிலுவைகளுக்கும் இடையே ரூபா 11 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

ரூபா 7,112,085 கூட்டு மொத்தமான முற்பண கொடுப்பனவுகளை பெறுநர் விபரம், வழங்கப்பட்ட நோக்கம், வழங்கப்பட்ட திகதி என்பன கிடைக்கப்பெறாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 இணங்காமைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டு மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | | |
| (i) அத்தியாயம் 252 இன் பிரிவு 42(1) | - | சபைக்குச் சொந்தமான 12 தற்காலிக கடைகளை நிரந்தரக் கடைகளாக அமைத்த போது அங்கீகாரமற்ற கட்டடங்கள் தொடர்பாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் 252 இன் பிரிவு 42(அ) | - | சபையிடம் அங்கீகாரம் பெறப்படாது அமைக்கப்பட்டிருந்த 09 தொலைத் தொடர்பு கோபுர கட்டடங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (iii) அத்தியாயம் 252 இன் பிரிவு 230 | - | சபையினால் கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக ஆதனவரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள். | | |
| (i) நிதி ஒழுங்கு விதி 371 | 549,000 | 2011 ஆம் ஆண்டு பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் முயற்சி அமைச்சரினால் சபையின் 50 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிக்கான முற்பணம் நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி 571 | 2,678,118 | இரு வருடங்களுக்கு 24 நானாவித வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. |
| (iii) நிதி ஒழுங்கு விதி 849(2) | 13,993 | மாநகர சபையின் மூன்று உறுப்பினர் களுக்கு சர்வதேச தொலைபேசி அழைப்புக்களுக்காக சபை நிதியில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் 33 வாகனங்களிற்கு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | | பணத்தை அல்லது களஞ்சியப் பொருட்களை பெறுவதற்கு அல்லது அவற்றை கட்டுக்காப்பில் வைப்பதற்கு நிர்வாக ரீதியாக பொறுப்பாகவுள்ள அல்லது அதிகாரக் கையளிப்பின் கீழ் குறித்த பொறுப்புக்கள் கையளிக்கப் பட்டிருந்த 36 உத்தியோகத்தர்களிடம் பிணைப்பணம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (உ) வடக்கு மாகாண நிதி விதிகள் இலக்கம் 69 | | விபத்துக்குள்ளான சபையின் பிக்கப் வாகனம் தொடர்பில் கடந்த மூன்று வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை எடுக்கப்பதற்கு சபை தவறியிருந்தது. |

**1.3.5.2 வரித்தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

மீளாய்வாண்டில் சபையினது பயன்பாட்டில் இருந்ந 21 வாகனங்களுக்கான வருடாந்த வருமான வரி அனுமதிப்பத்திரக்கட்டணம் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 143,963,688 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 231,451,523 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 74,677,000 | 50,796,815 | 77,086,379 | 78,740,943 | 60,800,000 | 51,730,391 | 74,086,322 | 77,968,600 |
| (ii) | வாடகைகள் | 103,932,000 | | 101,762,393 | | 90,292,000 | | 78,669,607 | |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 68,489,000 | | 65,046,106 | | 69,962,000 | | 70,020,699 | |
| (iv) | ஏனைய வருமானம் | 102,902,000 | | 170,746,912 | 260,474,339 | 80,737,000 | | 123,390,323 | 370,972,912 |
| | | **350,000,000** | **50,796,815** | **414,641,790** | **339,215,282** | **301,791,000** | **51,730,391** | **346,166,951** | **448,941,512** |

#### 2.2.2 வீதவரிகள்

**வீதங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) கடந்த 03 ஆண்டுகளாக வீதங்களினை அறவிடுவதற்காக 57,360 பட்டியல்கள் படிவம்''கே'' இல் எழுதப்பட்டு ஆதன உடமையாளர்களுக்கு கையளிக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் இவை தொடர்பில் ஒவ்வொன்றிற்கும் ரூபா 3.50 வீதம் கூட்டுமொத்தம் ரூபா 200,760 பெறுமதியான இரு வகையான கட்டணங்களும் சம்மந்தப்பட்ட அலுவலர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதிவரை அத்தகைய பட்டியல்களை விநியோகிப்பதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(ii) கடந்த 03 ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்டிருந்த பட்டியல்களின் எண்ணிக்கையில் 15 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரையிலான நலிவுகள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் இனங்காணப்பட்ட ஆதனங்களின் எண்ணிக்கை, பட்டியல்கள் எழுதப்பட்டிருந்த ஆதனங்களின் எண்ணிக்கை மற்றும் பட்டியல்கள் விநியோகிக்கப்பட்டிருந்த ஆதனங்களின் எண்ணிக்கை என்பவற்றினை உறுதிப்படுத்தக்கூடிய வீதங்கள் அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளினையும் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமையால் பட்டியல் விநியோக நலிவுகளினையும் திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதுள்ளது.

(ஆ) ஆதனவரி நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 78,740,943 மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

**2.2.3 வாடகைகள்**

---------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ) கடை வாடகை**

நவீன சந்தைக் கடைத்தொகுதியில் உள்ள 04 கடைகளுக்கான வாடகை நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 660,000 அறவிடப்பட்டிருக்க கடந்த ஐந்து ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வியாபாரங்களின் உரிமைத்துவம் மீதான குத்தகை**

குத்தகை நிலுவைகளின் கூட்டு மொத்தம் ரூபா 1,232,634 அறவிடப்பட்டிருக்க கடந்த ஐந்து ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ) வியாபார அனுமதிப்பத்திரங்கள்**

சந்தைக்கடை உரிமங்களின் நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 240,534 கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தொழில் சார் அனுமதிப்பத்திரங்கள்**

19 சனவரி 2017 ஆம் திகதிய 2055 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரமும் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் 252 இன் 147 ஆம் பிரிவின் உப பிரிவு 247(இ) இன் பிரகாரமும் ஆண்டுக்கு வியாபார வரியாக ரூபா 2000 தொடக்கம் ரூபா 5000 என்ற வீச்சில் அறவிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் கூட்டு மொத்தம் 777,663 அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் ரூபா 96,918,652 தொகையான முத்திரைக்கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

**(அ) நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவிடத்தவறிமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) 2016 ஆம் ஆண்டில் சபையின் பௌதீக திட்டமிடல் பகுதியின் பொது முகாமைத்துவ உதவியாளரால் பற்றுச்சீட்டு வழங்கி சேகரிக்கப்பட்ட வருமானத்தில் அவரினால் கையாடல் செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 2,614,429 இனை அறவிட்டுக் கொள்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 01 வருடத்திற்கு மேலாக தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மின்சாரப் பகுதிக்குரிய ரூபா 3,710 பெறுமதியான காசுச் சோர்வு மற்றும் ரூபா 21,222 பெறுமதியான வங்கியிலிருந்து திரும்பிய காசோலைகள் தொடர்பில் ஐந்து ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒதுக்கங்களினைப் பயன்படுத்தத்தவறியமை**

சபையானது வருடாந்தம் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக வருமானங்களிலிருந்து ஒதுக்கங்களினை மேற்கொண்ட போதிலும் அவை நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாது தேக்கி வைக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு.

| | ஒதுக்கம் | 31 திசெம்பர் 2017 இல் நிலுவை | வருடாந்த ஒதுக்கீடு 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | அபிவிருத்தி ஒதுக்கம் | 20,875,028 | 26,102 | 1,264,681 | 13,035,789 | - | - |
| (ii) | பொதுநிதி ஒதுக்கம் | 21,834,279 | 14,052,807 | 3,555,481 | - | - | - |
| (ii) | பொது நூலக நிதி ஒதுக்கம் | 114,157,751 | 9,962,643 | 6,206,397 | 14,821 | - | - |
| (vi) | நகர அபிவிருத்தி ஒதுக்கம் | 13,931,674 | 4,871,039 | 1,972,390 | 2,171,021 | 1,847,873 | 1,222,761 |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் மீளாய்வாண்டில் 188 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ)** 2013 ஆம் ஆண்டில் சேவைப்பிரமாணக்குறிப்பிற்கு முரணாக நியமிக்கப்பட்டிருந்த மின்னியலாளர் நியமனத்தில் தொழிற் தகைமையற்ற மூன்று மின்னியலாளர்கள் தொடர்பில் நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ)** சேவையிலிருந்து இளைப்பாற்றப்பட்ட 133 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 652,486 கடந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் முன்னைய முதல்வரினால் தனியார் கம்பனியொன்றுடன் 31 சனவரி 2011 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் சபைக்கு உரித்தான 7.295 பரப்பு விஸ்தீரணமுடைய வண்ணாங்குள காணியொன்று சபையின் அனுமதியின்றி கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரரினால் அவ் ஆதனத்தில் சபையினதும் ஏனைய அதிகார சபைகளிடமும் முறையான அனுமதி பெறப்பட்டிருக்காது 28 கடைத்தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு கூட்டு மொத்தம் ரூபா 102.96 மில்லியன் ஆரம்ப வைப்பு பணமும் கடை வாடகை தாரரிடமும் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சபையிடம் அனுமதி பெறப்பட்டிராமை மற்றும் ஒப்பந்தகாரரால் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்க வேண்டிய வருமானங்கள் தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதி வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

சபைக்குரித்தான 05 வாகனங்கள் கடந்த 05 தொடக்கம் 22 ஆண்டுகளாக பழுதடைந்த நிலையில் திருத்தம் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றன. இதற்கான காரணங்களும் கணக்காய்விற்கு அறியக்கிடைத்திருக்க வில்லை.

#### 3.4.2 கையளிக்கப்படாத சொத்துக்கள்

சபையின் பயன்பாட்டிலுள்ள 34 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமைமாற்றம் செய்யப்படவில்லை.

#### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

சபையில் 31 வாகனங்கள் பயன்பாடற்ற நிலையில் வாகன தரிப்பிடத்தில் விடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அவற்றை பயன்படு நிலைக்கேற்றதாக்க முடியாதுள்ளமைக்கான காரணங்களும் கணக்காய்வுக்கு அறியக்கிடைத்திருக்கவில்லை.

#### 3.4.4 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் பரிந்துரைக்கு அமைவாக 67 பொருட்கள் சோர்வுகள் மற்றும் பொருட்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிராத 3,156 உருப்படிகள் தொடர்பில் நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமைக்கான காரணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் பழுதடைந்த நிலையிலுள்ள 37 உழவு இயந்திரங்களினை திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராது மீளாய்வாண்டில் கழிவுகள் சேகரிப்பதற்காக 15 உழவு இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டு ரூபா 15,110,203 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் பிக்கப் வாகனம் இயந்திரப் பொறியியலாளரிடம் திருத்துவதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்படாது தனியார் கம்பனியிடம் பரிசோதித்து பரிசோதனைக் கட்டணமாக ரூபா 43,326 செலுத்தப்பட்டிருந்தது.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் 11 ஆகஸ்ட் 2008 ஆம் திகதிய 21 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மேயர், பிரதி மேயர், ஆணையாளர், திட்டமிடல் அனுமதி வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடும் பகுதித்தலைவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழு என கூறப்பட்ட போதும் அதற்கு முரணாக பிரதம கணக்காளர், முகாமை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் ஆகியோருக்கு திட்டமிடல் கூட்டத்திற்கு பங்குபற்றியமைக்கு கூட்டுமொத்தமாக ரூபா 497,500 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் திட்டமிடல் அனுமதி வழங்கும் செயற்பாட்டில் ஈடுபடும் பகுதித்தலைவர்கள் என்பதினுள் உள்ளடங்குபவர்களை தெளிவாக வரையறுக்காது சுகாதார வைத்திய அதிகாரி, பொறியியலாளர், சோலைவரிப்பகுதி பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கூட்டுமொத்தமாக ரூபா 150,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 1,904,801 தொடக்கம் ரூபா 67,846,912 அல்லது 9 சதவீதம் தொடக்கம் 66 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 386,525 தொடக்கம் ரூபா 29,177,183 அல்லது 11 சதவீதம் தொடக்கம் 44 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
| --- | --- |
| கணக்கீடு | காணி விற்பனை வரிப் பதிவேடு, கணனிப் பராமரிப்புப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |